முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் குங்கிலியக்கலைய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

01.12.2018, சனிக்கிழமை

1. **தருமவேலி கொண்ட அரங்கனே**
**தருமபலம் கொண்ட தேசிகனே**
**கருமவினை போக்கி மக்களை**
**கலிகால துன்பம் அணுகா காக்க**
2. காக்கவே அவதாரம் எடுத்து வந்த
கருணைக்கடலே ஞானதேசிகனே
ஆக்கமுடன் உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
3. நூலை **விளம்பி தேள் திங்கள்**
**நிலமதனில் மூவை திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 15ம் நாள் 01.12.2018, சனிக்கிழமை)**
**ஞாலமதில் குங்கிலியக்கலைய நாயனாரும்**
நாட்டிடுவேன் உலகோர் நலம் பெற
4. நலம் தரும் அரங்கன் அருளமுது
நாடி வந்து உண்ணும் மக்கள்
பலமுடன் வளம் பல பெறுவர்
பாருலகில் பிணி அண்டா பெருவாழ்வு
5. வாழ்வுடன் சகல பாதுகாப்பும்
வல்லமையும் கண்டு சிறப்பர்
தாழ்வு எண்ணங்கள் வாராத
தனிப்பெருஞ்சக்தி சமத்துவ குணமும்
6. குணமான போக்கும் குடும்ப நலமும்
குரோதமில்லா நல் இல்லறம் நடத்தி
ஞானவானாக சிறந்து விளங்குவர்
ஞானிகளை பூஜித்து தரும் அமுது என்பதால்
7. என்கவே உண்ணும் மக்களுக்கு
எக்காலமும் கொல்லா நெறிபட
நன்மையே உலகோர்க்கு செய்யும்
ஞாலமதில் ஜீவதயவும் பெருகி
8. பெருகியே உலக மக்களுடன்
பேராசான் விரும்பும் வண்ணம்
ஆறுதலும் மாறுதலும் தரும் மக்களாய்
அருளமுது உண்பவர் தெளிந்திடுவர்
9. தெளிவும் ஞானபலமும் தரும்
திருஅமுதாய் அரங்கன் குடிலமுது
அழியாமை தரும் சக்தியாய் இருக்க
அன்பர்களே ஞானவரம் கேட்பவர்களே
10. கேட்காது உலகோர்க்கு தடையற
குறையிலா ஞானஅமுது அருளும்
மாட்சிமைமிக்க தரும சாலையாம்
மரணம் வெல்லும் அரங்கன் தருமபீடம்

11. தரும பீடம் அமுது உண்டு தேறிட
தவபலம் பெற்று சிறந்திட
வருகை தாரீர் ஏழாம் படை வீட்டுக்கு
வணங்கி வாரீர் அரங்கன் திருவடிக்கு ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் குங்கிலியக்கலைய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையற்ற தவங்களை செய்து தவசக்தியை தருமசக்தியாக மாற்றி உலகின் தர்ம சக்தியை அதிகரித்து தருமவேலி அமைத்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே தருமபலம் கொண்டிட்ட தருமராசனே மக்களின் கர்மவினைகளை போக்கி கலியுகத்தின் துன்பங்களெல்லாம் அவர்களை அணுகாதவாறு காத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட கருணைக்கடலே ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 15ம் நாள் 01.12.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே குங்கிலியக்கலைய நாயனார் யானும் உரைக்கின்றேன்.

எல்லா நலங்களையும் தந்தருளும் ஞானிகளின் அருளாசிகளுடன் ஆறுமுக அரங்கன் அளிக்கும் அருள் உணவினை ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை நாடி வந்து விரும்பி உண்ணும் மக்கள் எல்லா பலமும் வளமும் பெற்று சிறப்படைவார்கள். இவ்வுலகினில் பிணிகள் ஏதும் அணுகாது பெருவாழ்வினை வாழ்ந்து சிறப்பார்கள். சகலவிதமான அருள் பாதுகாப்பையும் வல்லமைகளையும் பெற்று சிறப்படைவார்கள், தாழ்வான எண்ணங்கள் எல்லாம் விலகி தனிப்பெரும் சக்தியும் பெருகி சமத்துவ குணம் வளர்ந்து குடும்பநலம் பெருகி குரோதங்கள் இல்லாத நல்இல்லறத்தினை நடத்தி ஞானவான்களாக சிறந்து விளங்குவார்கள்.

ஞானிகள் திருவடிகளை வணங்கி அருள் பெற்று தரப்படுகின்ற உணவு என்பதினால் அதை உண்ணுகின்ற மக்களுக்கு எக்காலத்தும் கொல்லா நெறிபட அவர்களை வாழச் செய்து உலக மக்களுக்கு நன்மையை செய்யும் அன்பர்களாக ஆக்கிடும்.

இவ்வுலகினில் ஜீவதயவு பெருகி உலக மக்களுடன் பேராசான் விரும்புகின்ற வண்ணம் ஆறுதலும் மாறுதலும் தருகின்ற நன்மக்களாய் அருளுணவினை உண்பவர்கள் தெளிந்திடுவார்கள்.

அறிவுத் தெளிவும் ஞானபலமும் தருகின்ற திருஅமுதாய் அரங்கனின் ஓங்காரக்குடில் உணவு அழிவிலாமையை தருகின்ற சக்தியாய் இருந்திடுவதினால் அன்பர்களே ஞானவரம்தனை கேட்பவர்களே கேட்காமலேயே உலக மக்களுக்கு தடையின்றி குறையில்லாமல் ஞான உணவினை அருளும் மாட்சிமைமிக்க தருமசாலையாம் ஆறுமுக அரங்கனின் தருமபீடம் துறையூர் ஓங்காரக்குடிலின் அருளமுதினை உண்டு தேறிட தவபலம் பெற்று சிறப்படைந்து கடைத்தேறிட வருகை தாரீர் துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வந்துமே பயபக்தியுடன் வணங்கி வாரீர் ஆறுமுக அரங்கனின் திருவடிகளை என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் குங்கிலியக்கலைய நாயனார்.

–சுபம்–